**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No: 33/2019 தேதி:18.12.2024**

**வா.சா. 1 – சீனிவாசன்**

**<u>குறுக்கு விசாரணை :</u>** ( பிரதிவாதி தரப்பில்)

நான் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். 2004 ஆண்டு வழக்கறிஞராக பதிவு செய்தேன். என் தந்தையை பெற்ற பாட்டனார் பெயர் வெங்கடசாமிநாயக்கர் என்றால் சரிதான். அவர் பெரிய நிலசுவான்தாரர் என்றால் சரிதான். அந்த பகுதியில் ஜமின்தாரர் என்று அழைப்பார்கள் என்றால் மைனர் வெங்கிடசாமிநாயக்கர் என்று அழைப்பார்கள். பிராதிற்கு விவரம் சொன்னது யார் என்றால் என் அப்பா சொன்னதன் அடிப்படையில் வழக்கறிஞரிடம் சொன்னேன். வழக்கில் கண்டுள்ள கோதையம்மாள் என்பவர் எனக்கு அத்தை ஆவார். என் அப்பாவிற்கு சகோதரி ஆவார். வழக்குரையில் கோவிந்தராஜ் என்பவருக்கு கோதையம்மாள் தாவா சொத்தை பொறுத்து 18.04.1977 அன்று கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்ததாக சொல்லியிருப்பது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ் எண்.19/82 வழக்கு நடந்த தீர்ப்பின் அடிப்படையில் அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிறைவேறுதல் மனு எண்.82/2002 தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் 2007 ல் என் தந்தை பெயருக்கு பத்திரம் பதிவு செய்யப்பட்டது அடிப்படையில் சொல்லியுள்ளேன். 18.04.1977 கிரைய ஒப்பந்தத்தை நான் பார்த்ததில்லை. ஓ.எஸ் எண்.19/82 வழக்கு கோவிந்தராஜ் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்றதை ஆற்றுதல் வழக்கா என்று எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்தால் ஒப்பந்தத்தை எழுதி வாங்கியவரும் கொடுத்தவரும் தரப்பினராக இருக்கவேண்டும் என்றால் சரிதான். ஓ.எஸ் எண்.19/82 வழக்கின் பிராதை நான் பார்த்ததில்லை. ஓ.எஸ் எண்.19/82 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நான் பார்த்ததில்லை. ஓ.எஸ் எண்.19/82 வழக்கில் யார்யார் தரப்பினர் என்றால் 2007 பத்திரத்தை பார்த்ததில் கோதையம்மாள், பரமசிவம்கவுண்டர் மற்றும் சிலர் பிரதிவாதிகளாக இருந்துள்ளார்கள் சரியாக ஞாபகம் இல்லை. ஓ.எஸ் எண்.19/82

வழக்கில் வாதி யார் என்று ஞாபகம் இல்லை. 1983 ஆண்டில் ஏற்பட்ட தீர்ப்பிற்கு 2002 ஆண்டில் அருப்புக்கோட்டை நீதிமன்றத்தில் வழக்கு போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நிறைவேறுதல் மனுவை நான் பார்த்ததில்லை. நிறைவேறுதல் மனுவில் யார்யார் தரப்பினர்கள் என்றால் எனக்கு தெரியாது. 1977 ஆண்டு கிரைய ஒப்பந்தத்தில் என் தந்தை தரப்பினர் கிடையாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஓ.எஸ் எண்.19/82 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் என் தந்தைக்கு கிரையம் நீதிமன்றம் மூலம் கொடுத்ததாக வா.சா.ஆ 6 ஆவணம் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் என் தந்தைக்கு கிரையம் செய்து கொடுத்தது என்று ஓ.எஸ் எண்.19/82 வழக்கு கோப்பை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். பிராது பாரா 6 ல் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் எல்லாம் ஆவணங்கள் அடிப்படையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரை தாக்கல் செய்யும்போது பாரா 6 ல் உள்ள விவரத்தை வா.சா.ஆ 6 பத்திரத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ 6 ஆவணத்தில் கோதையம்மாள் என் தந்தைக்கு கிரையஒப்பந்தம் போட்டதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் என் அப்பாவிற்கோ அல்லது கோவிந்தராஜனுக்கோ கிரையம் எழுதி கொடுக்க வேண்டும் என தீர்ப்பானதாக என் அப்பா சொன்னார். அவ்வாறு எந்த வாசகமும் வா.சா.ஆ 6 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். என் பிராதில் கோதையம்மாள் கோவிந்தராஜ்க்கு கொடுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் என் அப்பாவிற்கோ அல்லது கோவிந்தராஜனுக்கோ கிரையம் எழுதி கொடுக்க வேண்டும் என மேற்படி வழக்கிலோ அல்லது தீர்ப்பிலோ சொன்னதாக இந்த வழக்கிலோ என் பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். ஓ.எஸ் எண்.19/82 மற்றும் நிறைவேறுதல் மனு ஆகியவற்றை பார்த்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். பாரா 6 ல் சொல்லப்பட்டுள்ள நீதிமன்ற வழக்கு கோப்புகளை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவேண்டும் என பிரதிவாதி தரப்பில் குறிப்பாணை தாக்கல்செய்யப்பட்டது என்றால் அதற்கு எங்கள் தரப்பில் மறுப்புரை தாக்கல்செய்யப்பட்டுள்ளது. கையில் உள்ள ஆவணங்கள் வீடு பராமரிப்பின்போது கைதவறுதலாக எங்கோ வைத்துவிட்டதால் பிரதிவாதியே நகல் போட்டு பெற்றுகொள்ளலாம் என்று மறுப்புரை தாக்கல்செய்துள்ளேன். கைதவறுதல் ஆவதற்கு முன்பு மேற்படி ஆவணங்கள் என்

அப்பா வசம் இருந்துள்ளது. தாவா சொத்து உள்ளடங்கிய புல எண். 636/5 அதன் விஸ்தீரணம் 6 ஏக்கர், 7 செண்டு ஆகும். தாவா சொத்து ஆதியில் என் பாட்டனார் வெங்கடசாமிநாயக்கருக்கு பாத்தியப்பட்டது. 1956 ஆண்டில் ஒரு செட்டில்மெண்டு எழுதி வைத்தார். அதில் தாவா புல எண்.636/5 சொத்தினை 3 அத்தைகளுக்கும் பாத்தியபடுத்தி எழுதி கொடுத்திருந்தார். மொத்த சொத்தில் தென்புறம் 2 ஏக்கர், 2 செண்டு திருவேங்கடம்மாளுக்கும், நடுமையத்தில் 2 ஏக்கர், 3 செண்டு ஆழ்வார்அம்மாளுக்கும், வடபுறம் 2 ஏக்கர், 2 செண்டு கோதையம்மாளுக்கும் எழுதி கொடுத்திருந்தார். மையசொத்தின் உடைமைதாரர் ஆழ்வார்அம்மாளின் மகன் போத்திராஜ் அந்த சொத்தை வா.சா.ஆ 1 மூலம் 27.01.1997 தேதியில் பதிவு பத்திரத்தின் மூலம் வாதிகளான எங்கள் மூவர் பெயருக்கும் எழுதி வைத்தார். வா.சா.ஆ 1 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியும். வா.சா.ஆ 1 ஆவணத்தில் காணப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் சரிதான். கோதையம்மாள் எழுதி கொடுத்த ஒப்பந்தத்தின் படி 1983 ஆண்டில் தீர்ப்பு ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பிற்கு பிறகு 14 வருடங்கள் கழித்து 1997 ல் ஏற்பட்ட வா.சா.ஆ 1 பத்திரத்தில் சொத்தின் வடக்கு மாலாக என்ன போடப்பட்டுள்ளது என்றால் கோதையம்மாள் புஞ்சை என்று சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ 1 கிரைய பத்திரம் போடும்போது கோதையம்மாளுக்கு எதிராக தீர்ப்பு ஏற்பட்டது தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ 1 ஆவணம் ஏற்படும்போதே வடக்குபுறம் கோதையம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று தெரிந்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த சமயத்தில் என் அப்பா தீர்ப்பாணை பெற்ற விவரம் தெரியாது. வா.சா.ஆ 1 கிரையம் பெற்றது என் அப்பாவிற்கு தெரியும். வா.சா.ஆ 1 கிரைய பத்திரம் எழுதிய காலத்தில் வடக்குபக்க சொத்திற்கு என் அப்பா தீர்ப்பாணை பெற்றதாக என்னிடம் சொன்னாரா என்று ஞாபகம் இல்லை. வா.சா.ஆ 2 ஆவணத்தில் கண்ட சொத்து என் அத்தை திருவேங்கிடம்மாளுக்கு பாத்தியம். திருவேங்கிடம்மாள் செல்வசீராளன் என்பவருக்கு வா.சா.ஆ 3 ஆவணத்தின்படி கிரையம் கொடுத்துள்ளார். செல்வசீராளன் காலத்திற்கு பிறகு இந்த சொத்தை பொறுத்து அவர் மகன் சாந்தகுமார் என்பவர் எனது பெயருக்கு அதிகார முகவர் ஆவணம் எழுதி கொடுத்ததாக வா.சா.ஆ 2 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரம் என் கைவசம் இல்லை. பதிவு

அலுவலத்தில் வாங்கி வைத்துவிட்டார்கள். பவர் பத்திரத்தின் நகல் தாக்கல்செய்யவில்லை என்றால் நகல் கிடைக்காது. அந்த நகலை பார்த்தால் சாந்தகுமார் என்ன வகையான அதிகாரம் கொடுத்துள்ளார் என்பது தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணத்தை செல்வசீராளனுக்கு திருவேங்கடம்மாள் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். செல்வசீராளனுக்கு திருவேங்கடம்மாள் எழுதி கொடுத்த சொத்திற்கு வடக்கே ஆழ்வார்அம்மாள் பங்கு சொத்தாகும். வா.சா.ஆ 3 ஆவணத்தில் சொத்தின் வடக்கு எல்லையாக பாண்டுரங்கன், மாரியம்மாள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் பாண்டுரங்கன் ஆழ்வார்அம்மாளின் கணவர். மாரியம்மாள் யார் என்று தெரியவில்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.